# பகவான் பலராமர்

## சாந்திப்பிரியா



இராமாயண யுத்தம் முடிந்து பகவான் ராமர் அவர் மனைவி சீதா தேவி மற்றும் பகவான் லஷ்மணர் சமேதியாக அயோத்திக்குத் திரும்பினார்கள். அதன் பின் பல நிகழ்ச்சிகள் நடந்தேறின. பகவான் ராமரும், பகவான் லஷ்மணரும் அவரவர் அவதாரம் முடிந்து அடுத்த அவதாரம் எடுக்கச் சென்று விட்டனர். அப்போது கடைசி கட்டத்தில் பகவான் ராமரைப் பார்த்து பகவான் லஷ்மணர் கூறினார் 'அண்ணா எனக்கு ஒரு ஆசை. நான் இதுவரை நீங்கள் கூறியபடியேதான் நடந்து வந்துள்ளேன். ஆனால் என்னால் சுயமாக சிந்திக்க முடியாமல் போய் விட்டது. ஆகவே நான் அடுத்த ஜென்மத்திலாவது, அது என்ன பிறப்பாக இருந்தாலும், நானாக முடிவெடுக்கும் நிலையில் இருக்க வேண்டும் என்பது மட்டும் அல்ல,

அந்த அவதாரத்திலும் உங்களுக்குத் துணையாக இருக்கவே விரும்புகிறேன்'. பகவான் ராமர் சிரித்து விட்டு 'அப்படியே ஆகட்டும்' என்று கூறி விட்டு சென்ற பின் சில நாட்களிலேயே இருவரும் தாம் எடுத்த அவதாரங்களை முடித்துக் கொண்டார்கள். அடுத்த அவதாரத்தில் பகவான் ராமர் பகவான் கிருஷ்ணராகவும், பகவான் லஷ்மணர், பகவான் பலராமனாகவும் அவதாரம் எடுத்தார்கள்.

ஒரு நாள் ஆதிசேஷன் மீது அமைதியாகப் படுத்துக் கொண்டு இருந்த பகவான் விஷ்ணு பகவானிடம் சென்ற நாரத முனிவர் அவரிடம் கேட்டார் ' ஐயனே நீங்கள் உங்களது எட்டாவது அவதாரத்தில் பகவான் பாலராமராகவும், ஒன்பதாவது அவதாரத்தில் பகவான் கிருஷ்ணராகவும் பிறந்து உள்ளதாக கூறுகிறார்கள். ஆனால் இரண்டுமே துவாபர யுகத்தில்தான் நடந்துள்ளது. உங்களால் எப்படி இரண்டு பிறப்புக்களை சம காலத்தில் எடுக்க முடிந்தது? அது சாத்தியமா?

பகவான் விஷ்ணு கூறினார் , 'நாரதா உன் சந்தேகம் வலுவானதுதான். என்ன செய்வது? சில காரணங்களினால் சிலவற்றை நடத்திக் காட்டும் பொறுப்பை நான் ஏற்று உள்ளேன். அவற்றில் ஒன்றே பகவான் பலராம அவதாரமும். நான் ஒரு அவதாரத்தில் பகவான் ராமனாகப் பிறந்து இருந்தபோது, என்னுடைய தம்பியாக பகவான் லஷ்மணன் இருந்தார். அந்த பகவான் லஷ்மணன் யார்? என்னுடைய படுக்கையான ஆதிசேஷனே பகவான் லஷ்மணனாக பிறப்பை எடுத்து இருந்தது. அடுத்து எடுத்த அவதாரமான பகவான் கிருஷ்ணருக்கு உதவியாக இருக்கப் பிறந்த பகவான் பலராமன் யார்? ஆதிசேஷனே பகவான் பலராமனும்'.

'நாரதா....கவனமாகக் கேள்.......... என்னால் பல அவதாரங்களை ஒரே நேரத்தில் எடுக்க முடியும். ஆனால் அனைவரினாலும் அவற்றை செய்ய முடியாது. நான் தசாவதாரம் எடுத்து சில காரியங்களை செய்ய வேண்டும் என்ற நியதி இருந்ததினால் என்னை படைத்த பரப்பிரும்மன் எனக்கு சில விசேஷ சக்திகளை அளித்து உள்ளார். அதில் ஒன்றுதான் பல ரூபங்களை ஒரே நேரத்தில் எடுக்கும்

நிலை. நான் எந்த அவதாரத்தை எடுத்தாலும், என்னுடைய மூல அவதாரத்தின் துணை எனக்குத் தேவை எனக் கருதியதினால் , என்னுடைய சக்தியில் ஒரு பாகத்தை கொண்டு ஆதிசேஷனை படைத்து அதையும் என்னுடனேயே வைத்துக் கொண்டு இருந்தேன். ஒவ்வொரு அவதாரத்திலும் எனக்குத் துணையாக ஆதிஷேஷனுக்குள் உள்ள என் சக்தியும் ஒரு உரு எடுத்து என்னுடன் துணையாக வர வேண்டும் என்று எண்ணியே அப்படி ஒரு ஏற்பாட்டை செய்தேன். ஆதிசேஷன் என்பது என்னால் படைக்கப்பட்ட ஒரு மாயையான உருவமே. அதில் வந்துள்ளதே பகவான் பலராம அவதாரமும். அதாவது என் மாயையான ஆதிசேஷனின் மூலம் வெளிவந்த அவதாரம் பகவான் பலராமர் அவதாரம் ஆகும்'.

'நான் பகவான் ராம அவதாரத்தில் இருந்தபோது என்னை வேண்டித் துதித்த பலரும், பல நன்மைகளை அடைந்தார்கள். ஆனால் என்னுடன் எப்போதும் இருந்த, என் கால்களில் தினமும் விழுந்து வணங்கி வந்த தம்பி பகவான் லக்ஷ்மணன் மட்டும் என்னுடன் சேர்ந்து பல துன்பங்களை அனுபவித்துக் கொண்டு இருந்தான். ஆகவே ஒரு அவதாரத்திலாவது பகவான் லஷ்மணனை எனக்கு மூத்தவராக அவதரிக்க வைக்க எண்ணினேன். அப்போதுதானே என்னுடைய நன்றிக் கடனை தீர்க்க அவருடையக் காலில் நான் விழுந்து வணங்க முடியும்? இதுவே நான் எடுத்த எட்டாவது மற்றும் ஒன்பதாவது அவதாரங்களின் பகவான் பலராம- பகவான் கிருஷ்ணனின்- ரகசியங்கள்' என்று கூறியதும் நாரதர் முகத்தில் வெளியாகிய இன்னொரு சந்தேகத்தை விஷ்ணு பகவான் கண்டு கொண்டார். ஆகவே நாரதரிடம் அவர் ஏன் தயங்குகிறார் என்று விஷ்ணு பகவான் கேட்க, நாரதரும், 'ஒரே நேரத்தில் எப்படி பல ரூபங்களை அதாவது அவதாரங்களை பகவான் விஷ்ணுவால் எடுக்க முடியும் என்பதை நேரில் பார்த்தால் ஒழிய யாரும் நம்பமாட்டார்களே என்று யோசிப்பதாகக்' கூற பகவான் விஷ்ணு கூறினார் 'நாரதா உன் சந்தேகத்திற்கு விளக்கம் அளிக்கும் வகையில் எனக்குள் அடங்கி உள்ள ரூபங்களையும் உலகறியச் செய்வேன். அதுவரை சற்று பொறுமையாக இரு' என்று கூறி விட்டு மறைந்து விட்டார். அதன் காரணமாகவே பகவான் விஷ்ணுவும் பகவான் கிருஷ்ணராக அவதரித்தபோது,

அர்ஜுனனுடைய சந்தேகத்தின் மூலம் விஸ்வரூபக் காட்சியை தந்து தனக்குள் அடங்கி இருந்த அனைத்து ரூபங்களையும் வெளிப்படுத்தினார்.

பகவான் விஷ்ணு எடுத்த அவதாரம் பத்து அவதாரங்களே என்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு உள்ளது. அதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அந்த அவதாரங்கள் சில யுகங்களில் ஒரு குறிப்பிட்ட காரியங்களை முடிக்க எடுக்கப்பட்ட அவதாரம். ஆனால் வேறு சிலர் விஷ்ணு பகவான் எடுத்த அவதாரம் இருபத்தி இரண்டு என்று கூறி அதற்கு ஆதாரமாக ஸ்ரீமத் பாகவதம் ஒன்றினை சுட்டிக் காட்டுகிறார்கள்.

பகவான் பலராம அவதாரத்தை எடுத்தபோது அவர் துரியோதனன் மற்றும், பீமனுக்கு கதையைக் கொண்டு யுத்தம் செய்யும் கலையைக் கற்றுக் கொடுத்தார். ஆனால் மகாபாரத யுத்தம் நடந்தபோது இருவருமே அவரிடம் சென்று அவருடைய துணையை நாடினார்கள். பகவான் பலராமர் கூறினார் 'நான் உங்கள் இருவரையுமே இரண்டு கண்களாக பாவித்தே அந்தக் கலையை உங்கள் இருவருக்கும் சமனாக கற்றுக் கொடுத்தேன். உங்கள் இருவரில் நான் யாருக்குமே எந்த பேதத்தையும் காட்டவில்லை. ஆகவே நான் உங்கள் இருவரில் யாராவது ஒருவருடைய பக்கத்தில் சேர்ந்தால், அது நான் என் மனசாட்சிக்கு செய்யும் துரோகம் ஆகும்' என்று கூறி விட்டு அவர்கள் இருவருக்கும் உதவ மறுத்து விட்டார்.

ஆனால் யுத்தத்தில், பகவான் கிருஷ்ணரின் யோசனைப்படி துரியோதனனின் தொடையைப் பிளந்து அவனை பீமன் கொன்ற போது, தான் அவர்களுக்கு கற்றுக் கொடுத்த யுத்த நேர்மை என்பதை பீமன் உடைத்து விட்டான் என்று கோபமுற்ற பகவான் பரசுராமர் பீமனைக் கொல்லச் சென்றார். அப்போது அவரை தடுத்து நிறுத்தினார் பகவான் கிருஷ்ணர். பகவான் பலராமனிடம் தம் இருவரின் அவதாரக் கதையையும் நினைவு கூறி, இந்த அவதாரத்தில் தனக்கு உதவியாக இருக்கவே அவரும் படைக்கப்பட்டு உள்ளதாகக் கூறிவிட்டு அவருடைய கோபத்தை தணித்து அனுப்பினார்.

மகாபாரத யுத்தமும் முடிந்தப் பின் பகவான் கிருஷ்ணரும், பகவான் பலராமரும் தமது ராஜ்யத்திற்கு சென்று விட்டார்கள். அப்போது ஒருமுறை பகவான் கிருஷ்ணரின் மகனான சாம்பவான திருமணத்தின்போது சாம்பவானை ஹஸ்தினாபுரத்தை ஆண்டவ ஒரு மன்னன் சிறைப் பிடித்துக் கொண்டு கடலுக்குள் சென்று விட, சம்பவானை மீட்பதற்காக பகவான் பலராமர் தனது கலப்பையின் நுனியினால் ஹஸ்தினாபுரத்து பூமியையை குத்தி, அதை இழுத்து வந்து சம்பவானை மீட்டார்.

வாழ்க்கையில் நாம் தெரிந்தோ தெரியாமலோ பலவித பாபங்களைச் செய்திருக்கலாம். அந்தந்த பாபங்களுக்கேற்ப அவரவர் கர்ம பலனை அனுபவித்து ஆகவேண்டும். செய்த பாபங்களுக்கு பரிகாரம் செய்து கர்ம வினைப் பலனைக் குறைத்துக் கொள்ள முடியும். அவ்வளவே. ஆனால் செய்த பாவத்திற்கு சிறிதளவாவது துன்பத்தை அனுபவித்தே ஆக வேண்டும் என்பது தெய்வ நீதி. இந்நிலையில் ஒருமுறை பகவான் விஷ்ணுவின் அவதாரமான பகவான் பலராமரே தனது தோஷங்களையும் பாபங்களையும் போக்கிக் கொள்ள தான தர்மங்கள், க்ஷேத்திராடனங்களுக்கு தீர்த்த யாத்திரை,பித்ரு கர்மா போன்றவற்றை செய்துள்ளார் என்று ஸ்ரீமத் பாகவதத்தின் தசமஸ்கந்தம் என்ற பிரிவில் கூறப்பட்டு உள்ளதாம். அப்படிப்பட்ட பாவத்தை பகவான் பலராமர் செய்ய வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது?

ஒரு சமயம் நைமிஷாரண்யா வனத்தில் ஒரு பெரிய யாகத்தை ரிஷி முனிவர்கள் செய்து கொண்டு இருந்தார்கள். அப்போது அங்கு சென்று அந்த யாக சாலைக்குள் பகவான் பலராமர் நுழைந்ததும் அனைத்து முனிவர்களும் எழுந்து நின்று பகவான் பலராமரைக் கரம் கூப்பி வணங்கி மரியாதை செய்தனர். ஆனால் வியாசரின் சிஷ்யரான ரோமஹர்ஷணர் என்ற முனிவர் மட்டும் தனது இருப்பிடத்தை விட்டு எழுந்திருக்காமல் யாக காரியத்தில் மூழ்கி இருந்தார். அவர், தன்னைச் சிறிதும் மதிக்காமல் அமர்ந்திருந்ததைக் கண்டு கோபமுற்ற

பகவான் பலராமர் சற்றும் யோசனை செய்யாமல் அந்த ரிஷியைக் கொன்று விட்டார்.

அதைக் கண்டு அதிர்ச்சியுற்ற முனிவர்கள் பெரிதும் வருந்தி, பகவான் பலராமருக்கு ஒரு பிராமணரைக் கொண்டதற்காக பிரும்மஹத்தி தோஷம் பிடிக்கட்டும் என்று சாபமிட்டு விட்டார்கள். பகவான் பலராமரும் தன் தவறை உணர்ந்து ஆத்திரத்தில் நிதானமிழந்து அந்த முனிவரைக் கொன்று விட்டதிற்கு என்ன செய்ய வேண்டும் என அவர்களிடம் கைகூப்பிக் கேட்டார். அவர்களும் அதற்கு பிராயசித்தமாக, அந்த யாகத்தை நடக்க விடாமல் ஒரு கொடிய அரக்கன் பல்வேறு கேடுகெட்ட செயல்களை செய்வதாகவும், ஆகவே பகவான் பலராமர் அந்த யாகம் நடந்து முடிய உதவிய பின் தீர்த்த யாத்திரையை மேற்கொண்டால் பிராமணரைக் கொன்ற பாபம் விலகும் என்று கூறினார்கள். அவர்களது வேண்டுகோளை ஏற்று அந்த யாகத்தைக் தடுத்து வந்த அரக்கனை பகவான் பலராமர் கொன்றார். யாகம் இனிதே நடந்தேறியது. அதன் பின் அந்த மா முனிவர்கள் கூறியபடி தனது பாபங்களையும் தோஷங்களையும் போக்கிக்கொள்ள பல ஷேத்ரங்களுக்கும் சென்றும், பல தீர்த்த யாத்திரையையும் மேற்கொண்டப் பின், பல தெய்வங்களையும் வழிபட்டுக் கொண்டு வந்த பகவான் பலராமர் தம்முடைய தோஷத்தைக் களைந்து கொண்டார். அதை எதற்காக செய்தார் என்றால் தனது அவதார புருஷரான பகவான் பலராமன் மூலம் பகவான் விஷ்ணுவானவர், பூமியில் பிறந்த அனைவருமே தாம் செய்த பாவங்களுக்கு தக்க பரிகாரங்களை செய்ய வேண்டும் என்ற தத்துவத்தை உலகறியச் செய்யவே அதை மேற்கொண்டார். அதற்குப் பிறகு நடந்த பல நிகழ்ச்சிகளின் முடிவில் பகவான் கிருஷ்ணர் தனது அவதாரத்தை துறந்துவிட, அந்த துயரத்தை தாங்கிக் கொள்ள முடியாமல் போன பகவான் பலராமனும், தனது உயிரை தானே விலக்கிக் கொண்டார். அப்போது அவர் தலையில் இருந்து ஆதிசேஷன் வெளியேறி அந்த அவதாரத்தை முடித்து வைத்தது என்று ஒரு கதை உண்டு.

# Lord Balarama

**Santhipriya**



After the end of Ramayana war, Lord Ram along with his consort Goddess Sita and brother Lakshman returned to Ayodhya. Several events unfolded thereafter and both Lord Ram and Lord Lakshman had to take next incarnation. Lord Lakshmana once told Lord Ram that since he was younger to Lord Rama, each command by his elder brother had to be obeyed by him. However in the next birth, he would like to be an independent thinker to act on his own whatever be his incarnation and at the

same time be supportive to his brother in whichever incarnation he may also appear. Lord Ram smilingly agreed to his wish and after ending their then incarnation, they took next incarnation in which Lord Ram incarnated as Lord Krishna while Lord Lakshman incarnated as Lord Balarama elder to Lord Krishna. The most astonishing fact was, both were incarnates of Lord Vishnu. How was it possible? This was clarified by Lord Vishnu himself.

Once when Lord Vishnu was resting on divine serpent Adihseshanag in the ocean, Maharishi Narada met him and asked him as to how it was possible for the Lord to incarnate as Lord Balarama in his eighth incarnation and as Lord Krishna in his ninth incarnation, both occurred in Dwapara Yuga, whereas Lord incarnate only once in each Yug. His doubt was whether the Lord could incarnate in two forms which are contemporaries, lived and moved together at the same time.

Lord Vishnu explained to Maharishi Narada that he was not an individual, but an energy and atman who had to take several incarnations for the benefit of mankind, one of which was incarnation as Lord Balarama. When Lord Vishnu incarnated as Lord Ram, Adihseshanag, the divine bed of Lord Vishnu too incarnated as Lord Lakshman to help him. Similarly when Lord Vishnu incarnated as Lord Krishna, in order to help him, Adihseshanag too incarnated as Lord Balarama.

Lord Vishnu further clarified this to Maharishi Narad. 'Listen Maharishi Narada, Parabrahman has bestowed me certain special divine power which is not available to others because I was destined to take Dasavathar (ten incarnations) to fulfil certain mission to benefit mankind. One such divine power bestowed by

Parabrahman to me was to take several incarnations contemporary to each other. Since I needed some help in all incarnations, I created a subordinate deity from my own divine powers to assist me in each of the incarnations and which was serpent Adihseshanag. Thereafter I had always ensured that divine Adihseshanag took birth as my deputy in whichever form I desired to help me. The divine serpent Adihseshanag was only a mirage image of mine and manifested as Lord Balarama when I incarnated as Lord Krishna.

When I incarnated as Lord Ram, many were graced by me with boons and other kind of blessings. However my own brother Lord Lakshman daily fell at my feet, stood by my side in thick and thin of life, underwent several tortures because of me and faced several hardships along with me. Therefore I decided that at least in one of the incarnations, he should be born as my elder which would give me mental solace that I too repaid my debt to him in the manner he served me. Hence when I incarnated as Lord Krishna I ensured that Lord Lakshman too incarnated as Lord Balarama'. However Maharishi Narada did not appear fully satisfied as he wanted to know how all divine manifestations were his divine energy (Lord Vishnu) alone. In order to convince Maharishi Narada, during Mahabharatha war, in the guise of clearing the doubt of Arjun, Lord Vishnu who incarnated as Lord Krishna displayed Visvaroopa darshan wherein all divines were seen within him.

Though the general belief has been that Lord Vishnu had taken ten incarnations, the truth is that those ten incarnations were taken by him in different Yugas in order to fulfil certain specific objectives. However as per Srimath Bhagavata, Lord Vishnu

has taken nearly twenty two incarnations in various forms beyond those ten crucial incarnations.

Duryodhana and Bhima were disciples of Lord Balarama and both were taught the skills of mace fight by Lord Balarama. When Mahabharatha war commenced both of them approached him to take part in the war on their sides, but Lord Balarama refused stating that he treated both of them alike in imparting the knowledge and therefore taking sides with any would be an act of betrayal to his conscience and therefore preferred to remain neutral.

When Bhima attacked Duryodhana on the thigh, in contravention of the rules of war, Lord Balarama was upset and rose up with anger to kill Bhima. However, he was persuaded to accept this transgression by his brother Lord Krishna, who recalled the purpose of their incarnation and he promise to help him (Lord Krishna), thus dousing the anger of Lord Balarama.

After Mahabharatha war ended, both Lord Balarama and Lord Krishna went back to their Kingdoms. Once when in the marriage of Lord Krishna's son Sambavan was going on, the King of Hasthinapura kidnapped Sambavan and imprisoned him in the underworld. In order to get him released from there Lord Balarama pulled out Hasthinapura from below the underworld with his axe, thus breaking mother earth into two halves.

One would have to undergo punishment commensurate to the sins committed by them and there is no exception to any. In order to display this fact to the mankind

in the universe, Lord Balarama the incarnate of Lord Vishnu, manifested through Adihseshanag had to undergo punishment for a sin committed by him. This has been stated in the Srimath Bhagavata under the chapter Dasamaskantha. What was the story behind it ?

Once a Yagya was performed by Rishi munis in Naimisaranya forest. When Lord Balarama visited the Yagya site everyone stood up and offered their obedience to him, but one of the Rishis Romaharshanar, the disciple of maharishi Ved Vyasa, ignored Lord Balarama. Angered by the insult, Lord Balarama instantly killed the Rishi. The shocked Rishi and other saints cursed that Lord Balarama attain Brahmahathi Dosha for having killed a Brahmin. Immediately realising his fault Lord Balarama offered his apologies to them and to atone the sin accrued he had to kill an asura who was creating problems to the Rishi and Munis from performing the Yagya. Lord Balarama went in war with that asura and killed him after which the Yagna ended peacefully to the satisfaction of everyone. Thereafter Lord Balarama had to undertake pilgrimage to several sacred places to get relieved of the sin accrued.

After Lord Krishna ended his life, distraught Lord Balarama lost all interest in life and sat under a tree in meditation and soon reached the state of Yoga Samadhi and a spirit in the shape of a snake came out of the body, as, Balarama was an incarnation of Adihseshanag thus ending his incarnation by himself.

Read further in : https://santhipriya.com/2012/05/balarama-avatharam.html